| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா 1,571,369 மற்றும் நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா 148,187 தொகை கூடுதலாக போது கணக்கீடு செய்யப்பட்டிருந்த மையால் மூலதன மானியம் மற்றும் மூலதனச் செலவினம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>(இ) பெற வேண்டிய விளம்பர பதாதை கட்டணங்கள் ரூபா 1,185,500 குறைத்து கணக்கீடு செய்தமையால் அப்பெறுமானத்தினால் செயற்பாட்டு மிகை மற்றும் பெறவேண்டியவைகளும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தன.<br><br>(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான பெறவேண்டிய உறுப்பினர் படிகள் ரூபா 255,000 பெறவேண்டிய நிர்மாண மானியமாக தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,580,071 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,038,201 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய 9 வாகன நிறுத்துமிடங்களுக்குரிய மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,396,703 தொகை யும் முன்னைய ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 15,967,112 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகை அறவீட்டிற்காக கடித ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக 101 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,396,831 தொகையும் முன்னைய ஆண்டிற்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 4,918,704 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை | அறவிடப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப் பட்டுள்ளதால் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டிற்காக 32 அறிவித்தல் பதாதைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,185,500 ஆன நிலையான விளம்பர பதாதைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை | குறித்த தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உத்தியோகதத்தர்கள் வெளிக்கள பரிசோதனைகளுக்குச் செல்லும் போது செலவிடுவதற்கு ஏற்படும் மேலதிக செலவினத்தை தீர்வுசெய்வதற்கு அந்த உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவினம் மற்றும் இணைந்த படிகள் சட்டரீதியாக உரித்தாக இருந்த போதும் 2012 ஆம் ஆண்டு முதல் 2020 யூலை மாதம் வரை சபையினால் அறவிடப்பட்டிருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணங்களிலிருந்து 50 சதவீதம் வரும் வகையில் ரூபா 603,993 ஆன விசேட படியொன்ற முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் குறித்த வெளிக்கள பரிசோதனைகளில் ஈடுபட்ட 12 உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் ஆலோசணை கிடைத்தபின் முறையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | விசேட படிகள் செலுத்தும் போது முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். |